## ஆத்தான் (வரதாசார்யர்)

## வாழி திருநாமம்

தழுவு திருமார்பனுடன் தண்பதுமை சேனை முதல்
சடகோபன் நாதமுனி தாள் தொழுவோன் வாழியே
வழுவில் புகழ் புண்டரீகக் கண்ணர் மணக்கால் நம்பி
வாழ் ஆளவந்தாரை வாழ்த்துமவன் வாழியே
அழகுடைய பெரிய நம்பி எதிராசர் அவரடி சேர்
அனைத்தாரியர் தங்கள் அருளுடையோன் வாழியே
எழிலுடைய இராமானுசம் பிள்ளைக்கு இனிய மைந்தன்
எங்கள் வரதாரியனார் இனிதூழி வாழியே

பங்கயத் திருத் தாளிணை வாழியே
பான்மதி திருவாடையும் வாழியே
அங்கமார் திருவுந்தியும் வாழியே
ஆர நூல் மணி மார்பும் வாழியே
சங்கு சக்கரத் தோளிணை வாழியே
தாமரைச் செந்திருமுகமும் வாழியே
மங்கலத் திருநாமம் வாழியே
வாழ் முடும்பை வரதாரியன் வாழியே

இன்பமுறும் குருகை நகர் இயம்ப வந்தோன் வாழியே
எங்கள் இராமாநுசம் பிள்ளைக்கு இனிய மைந்தன் வாழியே
தம் பரமாய் ஈடு பாஷ்யம் தந்தருள்வோன் வாழியே
தண்ணரங்கன் அருளாளர் தாள் தொழுவோன் வாழியே
அன்பராம் உலகாரியன் அருளுடையோன் வாழியே
ஆவணியில் சித்திரை நாள் அவதரித்தான் வாழியே
என் பரனாம் எதிராசன் இணை அடியோன் வாழியே
எழில் முடும்பை ஆத்தான் தன் இணை மலர்கள் வாழியே

வாழ்வளிக்கக் குருகை நகர் வந்துதித்தான் வாழியே
வரமங்கை மாமுனிக்கு வாழ்வளித்தான் வாழியே
ஆழ்வார் தம் கோஷ்டிகளை அடைவு செய்தான் வாழியே
ஆத்தான் எனும் நாமம் அடைவு பெற்றான் வாழியே
தாழ்வதிலாச் சித்திரையில் ஓணத்தான் வாழியே
தகும் அழகப்பாரியனைத் தான் அளித்தோன் வாழியே
ஏழ் பாரும் உய்ய ஈட்டுப் பதம் உரைத்தோன் வாழியே
எழில் முடும்பை வரதாரியன் இணை அடிகள் வாழியே

---